ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

24.05.2017 - மலர் 14, இதழ் 13




## உலகை உலுக்கியுள்ள இணையத் தாக்குதல்...!



## உலகப் புகழ் குப்பை மேடுகள்




## நில அளவை திணைக்களம் முன்னெடுக்கும் பணிகள்...

## சித்திரப் போட்டி


விபரங்கள் உள்ளே...

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸின் இளம் ஜனாதிபதி






பிரான்ஸின் அரசியல் வரலாற்றில் அனைவரையும் வியக்க வைக்கும் வகையில் புதிய ஜனாதிபதியாக இம்மானுவெல் மெக்ரோன் தெரிவாகியுள்ளார். 39 வயதான இம்மானுவெல் மெக்ரோன், பிரான்ஸின் இளம் ஜனாதிபதியாகவும் கருதப்படுகின்றார். ஜனாதிபதி தேர்தலின் இரண்டாம் சுற்று தெரிவின்போது 65.5 சதவீத வாக்குகளை இவர் பெற்றுக்கொண்டார். அதனையடுத்தே, பிரான்ஸ் ஜனாதிபதி பதவிக்கு இவர் தெரிவாகியுள்ளார். கடந்த 14ஆம் திகதி இவர் பிரான்ஸ் ஜனாதிபதி யாக பதவியேற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தகர்க்கப்பட்ட பாரம்பரியம்



பிரான்ஸின் அரசியல் வரலாறு வலது, இடது என்ற பாரம்பரிய நடைமுறைக்குட்பட்டதாக இருந்த நிலையில், அதனை தகர்த்து எறிந்துவிட்டு நடுநிலை வேட்பாளராக சுயாதீன கட்சியூடாக பதவிக்கு வந்துள்ள மெக்ரோன், பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் பெரும் புரட்சி ஒன்றினை நிகழ்த்தியுள்ளார். அதுமட்டுமன்றி, லீ பென் போன்ற தீவிர வலதுசாரி வேட்பாளர் ஒருவர், மக்களின் அதிருப்திக்குள்ளான முதலாவது சந்தர்ப்பமாகவும் இது கருதப்படுகின்றது.

## தனிப்பட்ட வாழ்க்கை

இம்மானுவெல் மெக்ரோன், 1977ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் திகதி பிரான்ஸின் அமியன் நகரில் பிறந்தார். 1999ஆம் ஆண்டு பிராந்திய பத்திரிகையொன்றின் ஆசிரிய பீடத்தின் பிரதான புகைப்படப்பிடிப்பாளர் களின் உதவியாளராக பணியாற்றி யுள்ளார். மெக்ரோன் பொதுமக்கள் தொடர்பு பற்றிய சிறப்பு பட்டதாரியாவார். 2009 இற்கு முன்னர்



பொதுவுடமை கட்சியையும் 2009-2016வரை சுயாதீன கட்சியையும் பிரதிநிதித்துவம் செய்தார். எனினும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் நோக்கில் 'En Marche' எனும் மத்தியவாத கட்சியினை 2016ஆம் ஆண்டு அவர் ஸ்தாபித்தார்.

## ஜனாதிபதி தேர்தல்

இம்முறை பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் 11 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதன் முதலாவது சுற்று வாக்கெடுப்பு கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி நடைபெற்றது. எனினும், இதில் எவரும் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இரண்டாம் சுற்றில் வெற்றி

இதனையடுத்து, இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டிய சூழல் உருவானது. இதன்போது, முதலாவது சுற்றில் முன்னணிக்கு வந்த மத்தியவாதக் கட்சி வேட்பாளரான மெக்ரோன் மற்றும் தீவிர வலதுசாரிக் கட்சி வேட்பாளரும் முன்னணி அரசியல் வாதியுமான மெரின் லீ பென் ஆகியோருக்கு இடையில் கடும் போட்டி நிலவியது. எனினும், பிரான்ஸிய அரசியல் வரலாற்றில் புரட்சி ஒன்று நிகழ்ந்துள்ளதாக அந்நாட்டு அரசியல் ஆய்வாளர்கள் வர்ணிக்கும் வகையில், இறுதிச் சுற்றில் இம்மானுவெல் மெக்ரோன் வெற்றியடைந்தார்.





## கொள்கைகள்

இவர் தனது தேர்தல் வாக்குறுதியாக புதிய அரசியல் சீர்திருத்தத்தினை அறிமுகம் செய்வதாக உறுதியளித்தி ருந்தார். பிரான்ஸிய மக்களுக்கான நலன்புரி செயற்றிட்டங்கள் மற்றும் ஓய்வூதியத் திட்டத்தினை அமுல்படுத்தவும் பிரான்ஸின் பொருளாதாரத்தினை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவுள்ள தாகவும் மெக்ரோன் குறிப்பிட்டுள்ளார்.

(-பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் வருகை வீழ்ச்சி



நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் மாணவர்களின் வருகை வீழ்ச்சி கண்டிருப்பதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே இந்நிலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


வறுமை நிலை காரணமாக, பிள்ளைகளை தொழிலுக்கு அனுப்பும் நோக்கிலேயே பெற்றோர் அவர்களை பாடசாலைக்கு அனுப்பாமல் தடுத்து வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இதில் அதிகப்படியாக ஆண் பிள்ளைகளே, இவ்வாறு பாடசாலைக்கு வராமல் தவிர்த்து வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே, இந்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட அதிபர்மார், பிரதி அதிபர்மார், ஆசிரிய ஆசிரியைமார் ஆகியோருக்கு இது தொடர்பில் தெளிவுறுத்தல் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைப் பகுதிகளில்
# வீதிக் கடவை மேம்பாலங்களை அமைக்கத் திட்டம்

மேல் மாகாணத்தில் அதிக வாகனப் போக்குவரத்து நிலவும் இடங்களிலுள்ள சில பாடசாலைகளுக்கு எதிரே வீதிக் கடவை மேம்பாலங்கள் அமைக்கப்படவிருப்பதாக வீதிப் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் இனங் காணப்பட்ட பிரதான மூன்று மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலைப் பகுதியிலேயே, இந்த வீதிக் கடவை மேம்பாலங்கள் அமைக்கப்படவுள்ளன. கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களே அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ள மாவட்டங்களாகும்.



ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ. 35 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இதற்கான கட்டுமானப் பணிகளை ஜப்பானிய நிறுவனமொன்று பொறுப்பேற்றுள்ளது.

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# தரம் 1-2 மாணவர்களுக்கும் ஆங்கில அச்சு நூல்கள்






இனிவரும் காலங்களில் பாடசாலையில் தரம் 1 மற்றும் தரம் 2 மாணவர்களுக்கும் ஆங்கில பாட அச்சுப் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும் என தேசிய கல்வி நிறுவகத்திற்கு கல்வித்துறை அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதுவரை காலமும் தரம் 3 தொடக்கமே ஆங்கில அச்சுப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டு வந்தன. இருப்பினும், மாணவர்களுக்கான ஆங்கில அறிவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாகவே இந்த புதிய முறை நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஆங்கில மொழியானது, ஒரு பொதுவான தொடர்பு மொழியாகும். இதனை கருத்திற்கொண்டே ஆரம்ப வகுப்பிலிருந்தே இதற்கான வழிப்படுத்தல்களை மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டிருப்பதாக கல்வித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெல்லுங்கள்
மாதம் ஒரு சைக்கிள்!



14 ஆம் வருடத்தை முன்னிட்டு
விஜய்

நீங்கள் செய்ய வேண்டியது
இந்த மாதத்திற்கான விஜய் பத்திரிகைகளில் வெளிவருகின்ற 'மாதம் ஒரு சைக்கிள்' கூப்பன்களை சேகரித்து அவற்றை ஒன்றிணைத்து மாத இறுதியில் எமக்கு தபாலிடுங்கள். குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு வெற்றிப் பரிசாக சைக்கிள் வழங்கப்படும்.

விஜய் மாதம் ஒரு சைக்கிள்
மாதம்: மே
திகதி: 24.05.2017
பெயர் : ....................
ஆண்/பெண் : ....................
முகவரி : ....................
....................
தொ.பே.இல : ....................
வயது : ....................
பாடசாலை : ....................
பரிசை நேரில் பெற்றுக்கொள்வேன் என உறுதிப்படுத்துகிறேன்
....................
கையொப்பம்
★ நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை பெரு நஷ்டம்

ஒரு கடலோரக் கிராமத்தில் இரண்டு நண்பர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒருவரது பெயர் சேது, மற்றொருவரது பெயர் ராமு. இருவரும் மீனவ நண்பர்களாவார். எந்தவொரு காரியமாக இருந்தாலும் ஒன்றாக இணைந்து செய்ய அவர்கள் விரும்பினார்கள். ஒரு நாள், இருவரும் சேர்ந்து எவ்வளவோ முயற்சிசெய்தும் கடலில் மீன்கள் கிடைக்கவில்லை. இறுதியாக, சேது ஒரு மீனைப் பிடித்துவிட்டான். ராமுவின் வலையில் மீன்கள் ஏதும் சிக்கவில்லை. சிறிது நேரத்தின் பின் இருவரும் வீடு திரும்பினார்கள்.

அப்போது சேது, "நம்மிடம் இருப்பது ஒரே ஒரு மீன்தான். உனக்கென்னவோ மீன்கள் சிக்கவில்லை. ஆகவே நமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்வோம். நான் இந்த மீனின் தலைப் பகுதியையும் உடல் பகுதியையும் எடுத்துக்கொள்கிறேன். நீ மிகுதிப் பகுதியை வைத்துக்கொள்" என்றான். சேது சொன்ன கருத்தை, ராமுவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை, அதனால் மீனின் தலைப்பகுதி தனக்குத் தேவையெனச் சொன்னான். இதைக்கேட்ட சேது, "இந்த மீனுக்கு உரிமையாளன் நான்தான். எனவே நான் சொல்வதைக் கேட்டு மிகுதிப் பகுதியை உனது பங்காகப் பெற்றுக்கொள்" என்றான். இதனால், இருவருக்கும் இடையில் வாக்குவாதம் மூண்டது. பின்னர், அது சண்டையாக மாறியது.

இதனை அறிந்த கிராம மக்களும் கிராமத் தலைவரும் அங்கே கூடினார்கள். இருவருக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக கிராமத் தலைவர் நீண்ட நேரம் ஆலோசித்துக்கொண்டிருந்தார். இறுதியாக, "சேது, மீனைப் பிடித்ததென்னவோ நீதான். ஆகவே உனக்கு மீனின் தலைப் பகுதி சொந்தமாகும். ராமு மீன்களைப் பிடிக்காத காரணத்தால் அவனுக்கு வால் பகுதி சொந்தமாகும். இருவருக்கும் இடையில் உண்டான பிரச்சினையை, நான் தீர்க்க வேண்டியிருந்ததால் மீனின் உடல் பகுதி எனக்குச் சொந்தமாகும்" என தீர்ப்பளித்தார் கிராமத் தலைவர்.

கிராமத் தலைவரின் முடிவைக் கேட்ட இருவரும் திகைத்து நின்றனர். ஆனால் அதைத் தவிர்த்து வேறு தீர்வு எதையும் யோசிக்க அவர்களால் முடியவில்லை.

இதனால், கிராமத் தலைவர் சொன்ன முடிவை ஏற்பதாக அவர்கள் ஒப்புக்கொண்டனர். மூவருக்குமான பங்குகள் பிரிக்கப்பட்டு ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டது.

கிராமத் தலைவரின் தீர்ப்பால் சேதுவும் ராமுவும் மிகவும் வேதனை அடைந்தார்கள். "பார்த்தாயா? நாமிருவரும், கிராமத் தலைவரின் தீர்ப்பை ஏற்றது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!



மீனின் உரிமையாளன் நான். ஆனால், கிராமத் தலைவரின் பங்காக மீனின் உடல் பகுதி கிடைத்து விட்டது. நான் இவ்வளவு சுயநலமாக இருந்திருக்கக் கூடாது என்றான் சேது. "இல்லை, நான்தான் சுயநலவாதி. அந்த மீனைப் பிடிக்காத நான், உன்னிடம் மீனின் உடல் பாகத்தைக்கேட்டுச் சண்டையிட்டேன். நீ கூறியபடி மிகுதிப் பகுதியை எடுத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பியிருக்க வேண்டும்" என்றான். இதனைக் கேட்ட சேது, இனியாவது நாமிருவரும் ஒற்றுமையாக இருந்து மீன்களை சமமாகப் பகிர்ந்து கொள்ளலாம் எனக் கூறினான்.

# வெற்றியின் ரகசியம்!



ஒரு குதிரைப் பந்தயத்திடலில் ஒரு பந்தயக் குதிரை அனைத்துப் போட்டிகளிலும் முதலாவதாக வந்தது. எப்போதும் வெற்றி பெறும் அந்தக் குதிரையை விலை கொடுத்து வாங்கிவிட்டால் சீக்கிரமே பெரும் பணக்காரராக ஆகிவிடலாம் என்று நினைத்தார் ஒரு வணிகர்! உடனே அந்த குதிரையின் உரிமையாளரிடம் விலை பேசினார்.

"குதிரைக்கு வேண்டியதை உங்களால் கொடுக்க முடியுமா?" என்று கேட்டார் குதிரையின் உரிமையாளர். இதைக் கேட்டவுடன் அந்த வணிகருக்கு கோபம் வந்துவிட்டது. உடனே "எது வேண்டுமானாலும்,எவ்வளவு வேண்டுமானாலும் என்னால் குதிரைக்குத் கொடுக்க முடியும்! அதைப் பற்றி உங்களுக்கு கவலை வேண்டாம்" என்றார்.

வணிகரும் குதிரையை வாங்கி விட்டார். பெருமையோடு அந்த குதிரையை அழைத்துச் சென்று புதிதாகக் கட்டப்பட்ட லாயத்தில் கட்டினார். அதனைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டார். உயர் ரக சாப்பாடு, சிறந்த மருத்துவம் என குதிரைக்கு ராஜ உபசாரம்தான்! இப்படியாக மாதங்கள் மூன்று கழிந்தன. பந்தயத்திற்கு குதிரை தயாரானது. ஆனால் பாவம்! அந்த குதிரை பத்தாவது இடத்தைப் பெற்றது. அடுத்தடுத்த போட்டிகளிலும் குதிரை படுதோல்வியடைந்தது.

வணிகருக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. குதிரையின் உரிமையாளரிடம் சென்றார். கோபத்துடன் அவரிடம், "குதிரையை நான் சரியாகத்தான் பராமரித்தேன். எனினும் அது அடுத்தடுத்துத் தோல்வியையே அடைந்து வருகிறது. இதற்குக் காரணம் என்ன? உன்னிடம் இருக்கும் போது மட்டும் அது எல்லாப் பந்தயத்திலும் வெற்றியே அடைந்து வந்திருக்கிறது. இப்போது மட்டும் ஏன் இப்படித் தோற்கிறது?" என்று கேட்டார்.

"என்னைச் சொல்லிக் குற்றமில்லை....நான் சொன்னபடி நீங்கள் குதிரைக்குத் தேவையானதைக் கொடுத்திருக்கமாட்டீர்கள்" என்றார். குதிரைக்குக் கொடுத்த ஆகாரத்தின் பட்டியலை நீட்டினார் செல்வந்தர். அதற்கு அளித்த மருத்துவ வசதிகளையும் கூறினார் அவர். "எல்லாம் சரி.! குதிரைக்குக் கொடுக்க வேண்டிய பயிற்சியைக் கொடுத்தீர்களா?" என்று கேட்டார் குதிரையை விற்றவர்!

செல்வந்தர் திகைத்தார்! விழித்தார்! தோல்விக்கான பதில் அதில் அடங்கியிருந்தது! அமைதியானார்!

"ஆம் இடைவிடாத பயிற்சி தான் வெற்றியின் ரகசியம்! பயிற்சி இல்லாத குதிரை பந்தயத்தில் ஜெயிக்காது" என்றார் குதிரையை விற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை உலுக்கிவரும் இணையத் தாக்குதல்



**மே** மாதம் பன்னிரெண்டாம் திகதி, நேரம் காலை பத்து மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. இணைய கண்காணிப்பாளர்கள் ஒரு விடயத்தை அவதானித்தார்கள். பிரிட்டனின் மருத்துவ சேவையும், ஸ்பெயினின் சில முக்கிய நிறுவனங்களின் தொழிற்பாடுகளும் ஓர் இனம்தெரியாத இணையத் தாக்குதலால் முடக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. கணினிகளின் ஊடாகப் பெற வேண்டியிருந்த முக்கியமான தகவல்களை அந்த நிறுவன ஊழியர்களால் பெற முடியவில்லை. அந்த தகவல்கள் மறைக்கப்பட்டிருந்தன. அதைப் பெற வேண்டும் என்றால், குறிப்பிட்ட தொகைப் பணத்தை 'மீட்புத் தொகையாக' செலுத்த வேண்டும் என்ற செய்தி அந்த கணினிகளில் திரையிடப்பட்டது. இவ்வாறுதான் ஆரம்பமானது 'Wannacry' இணையத் தாக்குதல்.




கைப்பற்றப்பட்டுள்ள, கணினி தரவுகள் படங்கள் கோப்புகள் ஆகியவற்றை, மீளப் பெற வேண்டுமாயின் தமக்கு பணம் செலுத்துமாறு கோரி சைபர் தாக்குதல்தாரிகளால் அனுப்பப்பட்டுள்ள அறிவித்தலையே இங்கு காண்கிறீர்கள்

## இணையத் தாக்குதல் என்றால் என்ன?

இணையத் தாக்குதல்களில் பல வகைகள் இருக்கின்றன. தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள 'Wannacry' தாக்குதலை நோக்குவோமாயின், அனைத்துமே முதலில் ஒரு வைரஸை கணினிக்குள் நுழைப்பதிலிருந்து ஆரம்பமாகின்றது.

மனித உடலுக்குள் புகும் வைரஸ் கிருமிகள் எப்படி மனிதனின் வழமையான செயற்பாடுகளை முடக்கி, மனிதனை நோயாளி ஆக்குகின்றதோ, அது போலத்தான் இதுவும். வைரஸ் என்றால், ஒரு கணினியில் ஏற்கனவே எழுதப்பட்டிருக்கும் முறையான நிரலிடல் முறைமை/கட்டளைகளை (Program) மாற்றி, வைரசை அனுப்புபவரின் தேவைக் கேற்ற விதத்தில் அவற்றை மாற்றி எழுதும் ஒரு Program ஆகும். இந்த வகையை சேர்ந்த தாக்குதல், 'Wannacry' அல்லது 'Wannacrypt' என்கின்ற பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது.




## இது எப்படி செயற்படுகின்றது?

இணையம் ஊடாக அல்லது வலைப்பின்னல் (Network) ஊடாகப் பகிரப்படும் அல்லது அனுப்பப்படும் சாதாரண wordfile அல்லது PDF வழியாகவும் ஒரு கணினியிலிருந்து இன்னொரு கணினிக்கு சென்று விடுகிறது. சென்றதும், அந்த கணினியில் இருக்கும் தகவல்களை (files, documents,..) encrypt செய்து விடுகிறது. encrypt என்றால், அந்த தகவல்கள் 'வெளிப்படும் மொழியை மாற்றுவது' என்று கூறலாம். சரியாகச் சொல்வதென்றால், தகவல்களை மறைத்து வைக்கிறது எனலாம். பிறகு அதனை பார்வையிட முனைவோருக்கு, திரையில் ஒரு அறிவுறுத்தல் காட்சிப்படுத்தப்படுகிறது. 'உங்கள் தகவல்கள் decrypt செய்யப்பட வேண்டுமென்றால் (அதாவது மீண்டும் பார்வையிடும் நிலைக்கு கொண்டு வருவது) நீங்கள் பணம் செலுத்த வேண்டும்' என்கிற செய்தியுடன், அதற்கான காலாவதி திகதியும் அறிவிக்கப்படுகிறது. 'இத்தனை நாட்களுக்குள் நீங்கள் பணம் செலுத்தாவிடில் உங்கள் தகவல்கள் முழுமையாக அழிக்கப்பட்டுவிடும்' என்கிற அறிவித்தலை காணலாம். கடந்த சில நாட்களில் ஏற்பட்ட இணையத் தாக்குதலின்போது இத்தகைய அறிவித்தல் அச்சுறுத்தல் ரீதியில் காணப்பட்டமையால் பல நாடுகளை இது நிலைகுலைய வைத்துள்ளது.

## இணையத் தாக்குதலின் விளைவுகள்

- ★ உலகம் முழுவதிலும் சுமார் 150 நாடுகளை சேர்ந்த 200,000 முறைமைகள் (systems) இதனால் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன.
- ★ ஸ்பெயினின் telefonica எனும் தொலைதொடர்பாடல் நிறுவனம் ஆரம்பத்தில் பாதிப்படைந்த நிறுவனங்களுள் ஒன்றாகும்.
- ★ பிரிட்டனின் 40 வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ சேவை நிறுவனங்கள் பாதிப்பிற்குள்ளாகின.
- ★ பிரான்சின் renault எனும் கார் உற்பத்தி நிறுவனம் இதனால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றது.
- ★ அமெரிக்காவின் புகழ்வாய்ந்த fedex எனும் பொதிகள் போக்குவரத்து நிறுவனம் இத்தாக்குதலால் முடக்கப் பட்ட மிகப் பெரிய நிறுவனங்களுள் ஒன்றாகும்.
- ★ இந்தியா மற்றும் சீனாவுக்குள்ளும் இணையத் தாக்குதல் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




## தற்போதைய நிலை

முதலில் ஐரோப்பாவில் ஆரம்பமான இந்த தாக்குதல், தற்போது அமெரிக்கா, ரஷ்யா, சீனா என்று உலகெங்கிலும் உள்ள 150 நாடுகளுக்கும் பரவியிருக்கிறது. இதுவரை இதன் பின்னணியில் இருப்பது யாரென்று தெரியவரவில்லை. அதனை அறிந்துகொள்வதற்கான தீவிர முயற்சிகளில் சர்வதேச இணையப் பாதுகாப்புப் பிரிவினர் இறங்கியுள்ளனர். இதனால், இத்தாக்குதலின் தீவிரம் சற்றுக் குறைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

- ஜெ.விபாகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் சகல இடங்களினதும் நீளம், அகலத்தை அளக்கும் நில அளவைத் திணைக்களம் கடந்துவந்த கரடு முரடான கடின பாதை உண்மையில் பல் வேறுபட்ட அனுபவங்களைக் கொண்டதாகும். இலங்கைக்குள் நிகழும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஆரம்பம் முதல் இறுதிவரை இந்த திணைக்களத்தால் வழங்கப்படும் சேவையானது, உண்மையில் அளப்பரியதாகும். இலங்கையில் அமைக்கப்பட்ட மிகவும் பழமையான திணைக்களமாகிய இது 217 வருட கால வரலாற்றுக்கு உரித்துடையது என்பதும் குறிப்பிடத்தக்கது.




# முழு நாட்டையும் அள

# நில அளவைத் திணை

## திணைக்களத்தின் வரலாறு

பிரித்தானிய ஆட்சியாளர்களால் இந்நாட்டின் காணிகளை அரச மற்றும் தனியார் காணிப் பிரிவுகளின் கீழ் தனித்தனியாக ஒதுக்கும் நோக்குடனேயே நில அளவைத் திணைக்களம் அமைக்கப்பட்டது. 1800 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி அப்பொழுது அரச பதில் செயலாளராக இருந்த வில்லியம் பொய்ட் அவர்களால் அரச ஆணையொன்று வெளியிட்டு இத்திணைக்களம் அமைக்கப்பட்டது. இதுவரை 46 நில அளவை ஆணையாளர்களின் தலைமையின் கீழ் இத்திணைக்களம் தனது நீண்ட பயணத்தை மேற்கொண்டுள்ளது.

## இன்றைய நிலை

நில அளவைத் திணைக்களத்திற்கு தற்போது தலைமை வகிப்பது நில அளவை நாயகமாகிய பி.எம்.பி.உதயகாந்த ஆவார். இவர் அளவீடு மற்றும் வரைபடத்தொழில்துறை தலைமையாளர் என்பதோடு, நில அளவைச் சபையின் தலைவராகவும் பணிபுரிகின்றார். இத்திணைக்களத்தின் கீழ் ஒவ்வொரு துறையிலும் தகுதிவாய்ந்த 5000 க்கும் அதிகமானோர் இப்பொழுது கடமை புரிகின்றனர். இத்திணைக்களத்திற்கு 25 மாவட்ட அலுவலகங்களும் 84 பிரதேச அலுவலகங்களும் உள்ளன. திணைக்களத்தில் உள்ள 30 இற்கும் மேற்பட்ட பல்வேறு பிரிவுகளின் ஊடாக திணைக்களத்தின் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.


கோணமானி

## கடமைகள்

அளவிடுதல் மற்றும் வரைபடம் தயாரிப்பது இந்த நிறுவனத்தின் பிரதான கடமைகளாகும். அதேவேளை, திணைக்களத்தின் மிக முக்கியமான தயாரிப்பான தேசிய வரை படமானது, சிங்களம், தமிழ், ஆங்கிலம் என மும்மொழிகளிலும் அச்சிடப்படுகின்றது. முக்கியமாக பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமாக விசேடமாக தயாரிக்கப்பட்ட பாடசாலை வரைபட வெளியீடுகளை வெளியிடுவது நில அளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மற்றுமொறு முக்கிய சேவையாகும். பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான வரைபடங்களை சரியான அளவுடன் கூடிய விதத்தில் வெளியிடும் இத்திணைக்களத்தின் www.survey.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரவேசிப் பதன்மூலம் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மகாவலி அபிவிருத்தித் திட்டம், கல்லோயா அபிவிருத்தித் திட்டம், தெற்கு அதிவேகப் பாதை, தெற்கு விமான நிலையம், உடவளவைத் திட்டம், தெற்கு துறைமுக அபிவிருத்தித் திட்டம், உமா ஓய திட்டம் போன்ற பாரிய அபிவிருத்தி திட்ட நடவடிக்கைகளிலும் இத்திணைக்களம் பெரும் பங்களிப்பை வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரைபடம் தயாரித்தல்

செய்மதி படங்களைப் பயன்படுத்தி வரைபடங்கள் அமைக்கப் படுகின்றன. இவ்வாறு தயாரிக்கப்படும் வரைபடங்களில் முக்கியமாக இரண்டு வகையான வரைபடங்கள் உள்ளன. 1985 இல் முதன் முதலாக செய்மதி படங்களைப் பயன்படுத்தி முழு இலங்கையை யும் உள்ளடக்கி 1:100000 அளவு வரைபடம் ஒன்று திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டது. 1:100000 வரைபடம் 1834 இல் முழு இலங்கையும் உள்ளடக்கி இருந்தது. 1:100000 வரைபடத்தை விட 1: 500000 வரைபடம் பெரியது. அதன்படி 1: 100000 அளவுள்ள 25 வரை படங்களில் காட்டப்படும் பிரதேசங்கள் 1: 500000 அளவில் ஒரே வரைபடத்தில் காட்ட முடியும். 1: 500000 அளவுள்ள 92 வரைபடங்கள் மூலம் முழு இலங்கையையும் உள்ளடக்க முடியும். இத்தகைய பிரதான வரைபடங்களைவிட, இலங்கையின் வீதி வரைபடங்கள் ஒன்றுக்கு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் (1:250000) அளவுள்ள வரைபடங்களும் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வரைபடங்களும் நில அளவைத் திணைக்களத்தால் தயாரிக்கப்படுகின்றன.

## விமான ஓட்டி இல்லாத விமானமொன்று

வானில் இருந்து படங்களை எடுத்து வரைபடங்களை தயாரிக்கப் பயன்படுத்தும் ஒரு வான் புகைப்படக்கருவியை அவசர அளவீட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர்.



## கோணமானி

கோணத்தைப் பார்ப்பதற்காக மட்டும் இந்த கருவியைப் பயன்படுத்துகின்றனர்.

## மட்டம் உபகரணம்

ஏதாவது ஓர் இடத்தின் உயரத்தை அளப்பதற்கு மட்டம் பார்த்தல் உபகரணம் பயன்படுத்தப் படுகின்றது.





நில அளவை நாயகம் பி.எம்.பி.உதயகாந்த



சிரேஷ்ட உதவி நில அளவை நாயகம் எஸ்.பி.தர்மதாச



மேலதிக நில அளவை நாயகம் (மத்திய) பி.சங்கக்கார



...க்கும் ...க்களம்

## அளத்தல்

முன்னைய காலங்களில் ஓர் இடத்தின் நிலையான அமைவிடம் குறித்த அளவீட்டுக்கும், திசையை குறிப்பதற்கும் தேவை யேற்படுமிடத்து அக் காலத்தில் மனிதனின் உடலின் அங்க அளவைப் பயன்படுத்தி உள்ளனர். உதாரணமாக, அடி, முழம், மேல் கட்டு போன்றவற்றை குறிப்பிடலாம். இடங்களின் எல்லை, பிரதான திசையின் வழியாக அதனோடிணைந்த இயற்கை எல்லை, இடங்களின் பெயர்கள் அல்லது அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் என்பன வற்றின் மூலமே விபரிக்கப்பட்டிருக்கும். அதேபோல் அந்நிலத்தின் அளவை அதன் விஸ்தாரத்தை நிலத்தில் விவசாயம் செய்வதற்கு தேவையான தானியத்தின் விதைகளின் அளத்தல் அலகைக் கொண்டே அளந்தனர். இதன்மூலம் அக்காலத்தில் நிலத்தை அளக்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையொன்று இருக்கவில்லை என்பது உறுதியாகின்றது.



மட்டம் அளவீடு


## ரொபோமிக் அளவுமானி

தற்பொழுது அளவீடு செய்வதற்காக அதிகமாகப் பயன் படுத்தப்படும் உபகரணம் இதுவாகும். டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் இது செயற்படுகின்றது. அளவு மானியைப் பயன்படுத்துவதன்மூலம் அளத்தல் செயற்பாடுகளை மிகவும் விரைவாக செய்து முடிக்கக்கூடியதாக உள்ளது.

நிகழ்காலத்தில் அளத்தல் நடவடிக்கைகளில் பெரும் பாலானவை இந்த உபகரணத்தின் மூலமே மேற்கொள்ளப் படுகின்றது. அவை தன்னியக்கமாக நிகழுகின்றது. தூரம், உயரம், கோணம் உள்ளிட்ட அனைத்து தரவுகளையும் இதனூடே ஒரே முறையில் பெற்றுக்கொள்ள முடியும். தனி மனிதனால் கையாளக்கூடியது.

## கையில் எடுத்துச் செல்லக்கூடிய GPS உபகரணம்

இது கையில் எடுத்துச் செல்லக்கூடியதோர் உபகரணம் ஆகும். இதன்மூலம் நபர் ஒருவர் இருக்கும் இடம் குறித்து அறிந்துகொள்ள முடியும்.




- இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (பகுதி - II)

பெயர்: ..................................................

01) கீழுள்ள பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஔவைக் கிழவி நம் கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் தமிழ்க் கிழவி
கூழுக்காகக் கவி பாடும்
கூனற் கிழவி அவர் உரையை
வாழும் வாழ்வில் ஒரு நாளும்
மறவோம் மறவோம் மறவோமே

1. 'கிழவி' என்பதன் பொருள் யாது?
   ..................................................
2. 'செவ்வை நெறிகள்' என்பதன் கருத்து யாது?
   ..................................................
3. 'கூனற் கிழவி' என்பதை பிரித்து எழுதுக.
   ..................................................
4. மறவோம் என்பதன் இறந்தகால வடிவம் யாது?
   ..................................................
5. பாடலில் உள்ள பெயர் அடைமொழி ஒன்று தருக.
   ..................................................
6. தமிழ்க் கிழவி என அழைக்கப்படுபவர் யார்?
   ..................................................

02) பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்து சொல் தருக.

1. அமுது - ..................................
2. கவி - ..................................
3. நாள் - ..................................
4. உரை - ..................................

03) பின்வரும் இணை மொழிகளுக்கு பொருள் தருக.

1. ஏழை எளியவர் - ..................................
2. உற்றார் உறவினர் - ..................................

04) பின்வரும் சொல்லை வைத்து கருத்துப்பட வாக்கியம் அமைக்க.

1. கிலி - ..................................................
2. பனி - ..................................................

05) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.

1. Please give me a pen.
   ..................................................
2. Who is your class teacher?
   ..................................................

06) தமிழில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை ஆங்கிலத்தில் தருக.

1. நீங்கள் எங்கே படிக்கிறீர்கள்?
   ..................................................
2. உங்கள் பெற்றோர் எங்கே?
   ..................................................




07) சிங்கள சொற்களுக்குரிய கருத்தை தமிழில் எழுதுக.

1. குருதுமா எனவா - ..................................
2. புட்டுவ உட தியன்ன - ..................................
3. அலியா துவனவா - ..................................

08) சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

1. எலி மூலம் பரவும் நோய் எது?
   1. பிளேக் 2. சின்னமுத்து
   3. மனநோய் 4. மலேரியா

2. பின்வரும் பிராணிகளில் மனிதனுக்கு வருமானம் ஈட்டித் தரும் பிராணி எது?
   1. நாய் 2. மான்
   3. பசு 4. கிளி

3. இலங்கையில் எவருடைய காலத்தில் பௌத்த மதம் பரவியது?
   1. தேவநம்பிய தீசன் 2. மகிந்த காலம்
   3. ஸ்ரீ சுமங்கல தேரர் 4. மகாசேனன்

4. திரவ நிலையிலுள்ள உலோகம் யாது?
   1. ஈயம் 2. இரசம்
   3. நாகம் 4. செப்பு

5. விடிவெள்ளி என அழைக்கப்படும் கோள் எது?
   1. சந்திரன் 2. வியாழன்
   3. புதன் 4. சுக்கிரன்

6. மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?
   1. துங்கிந்த 2. லக்ஷபான
   3. விக்டோரியா 4. பம்பரகந்த

7. பின்வருவனவற்றுள் ஒரே ஒரு முறை பூக்கும் தாவரம் எது?
   1. தென்னை 2. வாழை
   3. பலா 4. பனை

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

### கணிதம் (பகுதி - I)

(மே 17 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 3 | 04. 1 | 07. 2 | 10. 3 | 13. 1 |
| 02. 1 | 05. 3 | 08. 2 | 11. 3 | 14. 1 |
| 03. 3 | 06. 3 | 09. 1 | 12. 1 | 15. 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர் காலத்தில் மரணத்தை வெல்லும் மரத்தவளைகள்






தவளை இனங்களில் மரத்தவளை (Wood frog) என்றொரு தவளை இனம் உள்ளது. இவை பெரும்பாலும் வட அமெரிக்காவில் வாழ்கின்றன.

இந்த வகை தவளைகள்தான் குளிர் காலங்களில் இறந்து போய் மீண்டும் உயிர் பிழைக்கும் அதிசயத் தன்மையைப் பெற்றிருக்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த மரத் தவளை 50 மி. மீற்றர் முதல் 70 மி. மீற்றர் வரையான நீளம் உடையவை. அத்தோடு, பழுப்பு வண்ணத்தில் பெரிய மரங்களிலும், கிளைகளிலும், மரப்பட்டை இடுக்குகளிலும், இவை வாழ்வதால் இதனை மரத்தவளைகள் என்று சொல்கிறார்கள்.

குளிர்காலங்கள்தான் மரத்தவளைகளுக்கு பெரும் அவஸ்தையைத் தருகின்றன. அதனால் குளிர்காலம் தொடங்கும் போது, தவளையின் கல்லீரலில் இருக்கக்கூடிய கிளைக்கோஜன், அதிக அளவில் குளுக்கோஸாக மாற்றப்படுகிறது. இந்தக் குளுக்கோஸுடன் தவளையின் திசுக்களில் உள்ள யூரியாவும் சேர்ந்து கிரையோபுரொட்டக்டன்ஸ் (Cryoprotectants) என்ற பொருளாக மாறிவிடுகிறது. இந்தக் கிரையோபுரொட்டக்டன்ஸ் என்ற பொருள்தான் குளிரால் தவளையின் உடல் சுருங்கிடாத வண்ணம் செல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. இக்காலப் பகுதியில் மரத்தவளையின் உடம்பில் உள்ள நீர் 65 சத வீதம் உறைந்து விடும். இதயத் துடிப்பும் நின்றுவிடும். இறந்த நிலையில் இருப்பது போல் குளிர்காலத்தைக் கழிக்கும் மரத்தவளைகள், குளிர் காலம் முடிந்த பின்னர், தன் மேலே படிந்திருக்கும் பனித்துகள்களை உதறி விட்டு சுவாசிக்கத் தொடங்கி சாதாரண நிலைக்கு வந்துவிடும்.

## ஆரம்பகால கணினி



ஆரம்பகாலக் கணினியாகக் கருதப்படுவது 1835 ஆம் ஆண்டில் சார்லஸ் பாபேஜ் என்பவரால் உருவாக்கிய பகுப்பாய்வுக் கருவி (Analytical engine) ஆகும். இது நீராவியால் இயங்கியது. இதில் துளைகளைக் கொண்ட அட்டைகளைச் பொருத்தியதன் மூலம் இந்தக் கருவி இயங்கியது.



அதன்பின்னர், இக்கருவியில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் 1953 ஆம் ஆண்டில் புதிய கணினிகள் உருவாக்கப்பட்டன. இவை மின்சாரம் மூலம் இயங்கின. இந்தக் கருவிகள் மிகப் பெரிய அளவைக் கொண்டதாகவும், எளிதில் சூடேறுவதால், திடீரென செயல்பாட்டில் இருந்து நின்றுவிடும் தன்மையையும் கொண்டிருந்தது. இந்தக் கணினிகள் மிகப் பெரிய இடத்தை அடைத்துக்கொண்டதுடன், விலையும் அதிகமாக இருந்தன. 'IBM 650 computer' என்றழைக்கப்பட்ட இந்த கணினியின் எடை 2,000 கிலோ. அன்றைய மதிப்பில் அதன் விலையோ 5 லட்சம் அமெரிக்க டொலர்கள் ஆகும்.


விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

Thoovaanam SMS
செயற்படுத்தும் முறை

F Thoovaanam

என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)

அனுப்ப வேண்டிய முகவரி :

3 பரிசில்கள்
24.05.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

இவ்வார கூப்பன் - 24.05.2017
விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ......................
தொ.பே.இல: ..........................
பாடசாலை : ..........................
..............................
கையொப்பம்

3 பரிசில்கள் போட்டி - 10.05.2017
விடை: Jubaari Cantaloupe
வெற்றியாளர்:
ஏ.அப்ஸல்,
37/106, ஹுதா நகர்,
புதுக்குடியிருப்பு, கல்பிட்டி.

Gift sponsored by:
www.srijob.com







How to ask
Questions + Answers
in English
E-Book





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## 1937

மோட்டி பி.கிட்வானி இலக்கிய 'கிசன் கன்யா' திரைப்படம் இந்தியாவின் முதலாவது பலவர்ண திரைப் படமாகும். அர்தேஷிர் இரானி அதன் இயக்குனராவார்.

## 1954

இந்தியாவின் தேசிய திரைப்பட விருது விழா ஆரம்பமானது. Shyamchi Aai எனும் மராட்டி திரைப்படம் சிறந்த திரைப்படமாக தெரிவு செய்யப்பட்டது. அத்தோடு ஃபிலிம் ஃபெயர் (Film Fare) விழாவும் ஆரம்பமானது.



FILMFARE AWARDS

## 1959

பொலிவூட்டின் முதல் சினிமாஸ்கோப் திரைப்படமாக 'காகொஸ் கி புல்' எனும் திரைப்படம் உருவானது.



## 1965

காதல் மற்றும் திரைப்படங்கள் தோன்றின. பாகிஸ்தானில் பொலிவூட் திரைப்படங்கள் தடை செய்யப் பட்டன. அத்தடை 2006 இல் தான் நீக்கப்பட்டது.

## 1931

இந்தியாவின் முதல் பேசும் படம் 'அலாம் ஆராய்'(Alam Arai) என்பதாகும். அர்தேஷிர் இரானி என்பவர் இதன் இயக்குனராவார்.



## 1930 - 45

இந்திய சுதந்திரப் போராட்டம், இரண்டாம் உலக யுத்தம் காரணமாக, இந்தியாவின் திரைப்படக் கைத்தொழில் மற்றும் ஆதாரமாக வெளிப்படுத்தப்பட்ட அனைத்துப் படைப்புகளும் புதிய தரப் பரிமாணத்தைப் பெற்றது.

பொலிவூட் (Bombay+Hollywood) பொம்பாய் அல்லது மும்பாய் என அழைக்கப்படும் நகரில் உருவானது.

## ஒஸ்கார் வெளியீடு

1. மதர் இந்தியா (1957), 2. சலாம் பொம்பே (1988), 3. லகான் (2001) ஒஸ்கார் விருதுக்கு முன்மொழியப்பட்டுள்ளது.



## 1960

தொழில் ரீதியான இந்திய திரைப்படத்துறை மற்றும் தொலைக்காட்சி ஆய்வு நிறுவனங்கள் உருவாக்கப் பட்டன.



SCREEN AWARDS

## 1994

ஸ்க்ரீன் எவோட்ஸ் எனும் திரைப்பட விருது விழா ஆரம்பம்.



## 1995

குடும்பக் கதைகள் அதிகமாக படைக்கப்பட்டன.




1930 தசாப்தம் வரை இந்தியாவின் திரைப்படத் துறையின் கேந்திர மையமாக கொல்கத்தா நகரமே அமைந்திருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் காரணமாக, ஏற்பட்ட நெருக்கடிகளின் நிமித்தம் அது மும்பாய்க்கு நகர்ந்தது.

## 1995

சத்யஜித்ரே திரைப்பட, தொலைக்காட்சி ஆய்வு நிறுவனம் உருவாக்கப்பட்டது.

## 1998 - 2000

சீ சினே எவோட்ஸ் மற்றும் ஐஃபா விருது விழா ஆரம்பம். ஐஃபா விழா இந்தியாவிற்கு வெளியே ஏற்பாடு செய்யப்பட்டது.



## 2008

பொலிவூட்டின் முதலாவது முப்பரிமாண திரைப்படமாகிய 'ரொட்சைட் ரோமியோ' தயாரிக்கப்பட்டது.






## 1921

இந்தியாவின் திரைப்படங்களின்மீது ஹொலிவூட்டின் தாக்கம் ஏற்பட்டது.



## 1913

திரைப்பட இயக்குனர் தாதாசாஹேப் பால்கே அவர்களால் 'ராஜா ஹரிச்சந்திர' எனும் பெயரில் திரைப்படமொன்று தயாரிக்கப்பட்டது. இது ஓர் ஊமைப்படமாகும்.

## 3D

திரையரங்குகளில் 1050 திரையரங்குகள் 2011 இல் முப்பரிமாண (சினிமா) திரையரங்குகளாக நவீனமயப்படுத்தப்பட்டது.

## 50%

பொலிவூட் திரைப்படங்களில் 50% க்கும் அதிகமானவை மும்பாய் நகரிற்கு வெளியேதான் திரைப்படமாக்கப்பட்டன.

# பொலிவூட்டின் கதை

இந்தியாவின் ஹிந்திமொழி திரைப்படத்துறையை பொலிவூட் என்று அழைக்கின்றனர். அதன் 104 ஆவது வருட விழா இவ்வருடம் மே மாதம் 03 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இத் திரைப்படக் கைத்தொழில் இந்திய அரசின் அனுசரணை எதுவும் இல்லாது மேற்கொள்ளப்படும் ஒரு துறையாகும். எனினும், அது பெரும் இலாபம் ஈட்டும் வர்த்தகமாக தொடர்கின்றது. இதன்மூலம் இந்தியாவின் கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் வெளிப்படுத்தப்படுகின்றது.




## 1896

பிரான்சின் லூமியர் சகோதரர்களால் அவர்களின் திரைப்பட இயந்திரம் பொம்பாய்க்கு கொண்டு வரப்பட்டு Arrival of a Train at the Ciofat மற்றும் Leaving the Factory போன்ற சினிமாக்கள் காட்சிப்படுத்தப் பட்டன.



ஆரம்பகால சினிமா கெமரா (திரைப்பட புகைப்படக் கருவி)

### பொலிவூட்டுக்கு மேலதிகமாக மாநில ரீதியாக

தெலுங்கு (டொலிவூட்), தமிழ் (கொலிவூட்), கேரளா (மொலிவூட்) என்பனவும் வங்காளி சினிமா, கர்நாடக சினிமா, மராட்டி சினிமா என இந்தியாவில் மேலும் சில சினிமாத்துறைகளும் புகழ்பெற்று விளங்குகின்றன.

பொலிவூட் திரைப்படப் படைப்புகள் பல ஐரோப்பிய நாடுகளில் பெரும் புகழுக்கு பாத்திரமாகியுள்ளன.



இந்தியத் திரைப்பட சஞ்சிகைகள்

2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் சினிமாக் கைத்தொழிலில் எதிர்பார்க்கும் ஆண்டு வருமானம் 3.7+ $

| | | | |
|---|---|---|---|
| பொலிவூட்டில் ஆண்டு ஒன்றிற்கு தயாரிக்கப்படும் திரைப்படங்களின் எண்ணிக்கை | 850+ | திரைப்படங்கள் தயாரிக்கப்படும் மொழிகளின் தொகை | 20 |
| இந்தியாவில் இயங்கும் திரையரங்குகளின் தொகை | 13000 | சினிமா விருது விழாக்களின் தொகை | 24+ |
| ஆண்டுதோறும் விற்பனையாகும் சினிமா டிக்கட்களின் தொகை | 3.5+ | அனைத்து ஹொலிவூட் திரைப்பட நிறுவனங்களும் பொலிவூட்டுடன் இப்பொழுது இணைந்துள்ளன. | |

FOX, Disney UTV, WB, SONY PICTURES, VIACOM 18



இதுவரை அதிக வருமானத்தை தேடிக்கொடுத்த திரைப்படம் 2014 ஆம் ஆண்டில் வெளியான PK திரைப்படமாகும் 792+



நவீன வகையான டிஜிட்டல் திரைப்படக் கெமரா.

(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான சுகாதாரப் பழக்கங்கள்



சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுதல்



தினமும் குளித்தல் / உடலைக் கழுவுதல்




பல் துலக்குதல்



சுத்தமான ஆடைகளை அணிதல்




தலைமுடியை பராமரித்தல்

# வானிலை நிலவரங்கள்








# உங்கள் அறையை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க...





நித்திரை விட்டெழுந்ததும் படுக்கையை சரிப்படுத்துங்கள்



விளையாட்டுப் பொருட்களை உரிய இடத்தில் வையுங்கள்



குப்பைகளை குப்பைத் தொட்டியில் போடுங்கள்

புத்தகங்களை அடுக்கி, படிக்கும் மேசையை ஒழுங்குபடுத்துங்கள்



பாதணிகளை அடுக்கி வையுங்கள்

தரையைப் பெருக்கி சுத்தம் செய்யுங்கள்



அழுக்கான ஆடைகளை கழுவும் கூடையில் போடுங்கள்





ஆடைகளை நேர்த்தியாக அடுக்கி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படம் இருக்கும் இடத்தில் வர வேண்டிய சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக

01. இந்த  பச்சை இலைகள் நிறைந்துள்ளன.

..........

02.  அட்டையில் நீலம், ஊதா நிறங்கள் காணப்படுகின்றன.

..........

03. அந்த  புல்வெளியில் மேய்ந்துகொண்டு இருக்கின்றது.

..........

04. இந்த  மிகவும் அழகானது.

..........

**01. படத்தில் காணப்படுபவை;**

1. பழங்களும் கனிகளும்
2. பழங்களும் காய்கறிகளும்
3. பச்சை மற்றும் மஞ்சள் நிறக் காய்கறிகள்



**02. திராட்சையில் .................... வகைகள் காணப்படுகின்றன.**

1. இரண்டு 2. மூன்று 3. ஏராளமான

**03. 'செடியின் மேல் காய்; காயின் மேல் செடி' என்ற விடுகதைக்குப் பொருத்தமான பழம் எது?**

1. அப்பிள் 2. அன்னாசி 3. திராட்சை

**04. ஊதா நிறத்தில் காணப்படும் காய்கறி வகை யாது?**

1. திராட்சை 2. வெள்ளரிக்காய் 3. கத்தரிக்காய்

## இவர்கள் என்ன செய்கின்றனர்?

| | | |
|---|---|---|
| எழுதுகின்றாள் | குதிக்கின்றாள் | ஓடுகின்றான் |
| கதைக்கின்றாள் | நடக்கின்றாள் | தூங்குகின்றாள் |
| வாசிக்கின்றாள் | விளையாடுகின்றான் | |



..........



..........



..........



..........



..........



..........



..........



..........






01. புத்தகம் வாசித்துக் கொண்டிருப்பவருக்கு அருகில் காணப்படும் உயிரினம் யாது?

..........................................

02. ஓவியம் வரைந்துகொண்டிருப்பவர் அணிந்திருக்கும் ஆடையின் நிறம் என்ன?

..........................................

03. ஜன்னலுக்கு வெளியே தெரிவது என்ன?

..........................................

04. இங்கு மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

..........................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 241

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ |
| | ■ | | 2 | 3 | |
| 4 | | 5 | | ■ | 6 |
| | ■ | ■ | ■ | 7 | |
| ■ | 8 | | ■ | | ■ |
| | | 9 | | 10 | |

### மேலிருந்து கீழ்

1. 'ஆம்பல்'. (குழம்பியுள்ளது)
2. நெற்செய்கை மேற்கொள்ளப்படும் இடம். (குழம்பியுள்ளது)
3. தமது. (தலைகீழ்)
5. இடம்-எதிர்ச்சொல். (குழம்பியுள்ளது)
6. நீர். (குழம்பியுள்ளது)
8. தமிழ் மாதங்களில் ஒன்று.
9. கடும் குற்றம். (தலைகீழ்)
10. அழகு. (குழம்பியுள்ளது)


### இடமிருந்து வலம்

1. உலகம்.
2. முகம். (குழம்பியுள்ளது)
4. புன்னகை.
7. அம்பு எய்வதற்குப் பயன்படும் சாதனம்.
8. சமுத்திரம்.
9. ஏறவும் இறங்கவும் உதவும். (குழம்பியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி: 240


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 யு | வ | 2 தி | ■ | 3 க | ண் |
| த் | ■ | கி | க் | 4 கா | ■ |
| 5 த | ழ | ல் | ■ | ரி | 6 அ |
| ம் | ■ | ■ | 7 வே | ல | ன் |
| ■ | ரை | ■ | 8 பு | ன் | னை |
| 9 வி | 10 சு | பு | ம் | ■ | ■ |

## A படத்தை அவதானித்து B படத்திலுள்ள 5 வித்தியாசங்களில் X அடையாளமிடுக



A B

## எத்தனை உள்ளன?



* எண்ணிக்கையை இங்கே எழுதுங்கள்




## சரியான சொற்களை எழுதுங்கள்



pumj ______



tetlek ______





lfato ______



ustd ______

## அறிவுக்கு விருந்து (10.05.2017) விடைகள்












## படங்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் இணையுங்கள்



VASE

VEGETABLES

VAN

VULTURE

VIOLIN

VEST



-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லுணுகலை-பிரதேச எல்லைக்குட்பட்ட மடுல்சிமை-ஊவாக்கலை தோட்டத்தில் பாரதி கிராம அபிவிருத்தி மன்றத்தினால் புதிதாக நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஊவா மாகாண கிராமிய அபிவிருத்திப் பணிப்பாளர் உபாலி கலந்துகொண்டு நூலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மடுல்சிமை பகுதி பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். தகவல்: மலர்வேந்தன் (நமுனுகுல)

விஜய் விழா உலா
த.பெ.எண் 2037
கொழும்பு

# மனித உடலுக்குத் தேவையாகும் புவியீர்ப்பு விசை

புவியில் நாம் நிலையாக நிற்கக் காரணம் புவியீர்ப்பு விசைதான். புவியீர்ப்பு விசை இல்லை என்றால் எமது உடல் அந்தரத்தில் தத்தளிக்கத் தொடங்கிவிடும். நாளடைவில் எமது உயரம் அதிகரிக்கும். எலும்புகளின் அடர்த்தியும் குறையும். செல்களின் இயக்கத்தில் அயனிகளின் செயற்பாடுகள் அதிகமாகி வளர்சிதை மாற்றங்கள் தடுக்கப்படும். இதனால், சிந்திக்க முடியாத தன்மை மனத்தடுமாற்றம், சித்தப் பிரம்மை என்பன ஏற்படும்.





மேலும், நாம் எழுத, வாசிக்க, சாப்பிட என நாளாந்தம் கடைப்பிடிக்கும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் புவியீர்ப்பு விசை அவசியமாகின்றது. புவியீர்ப்பு விசையானது, எமது கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் மனித உடலில் புவியீர்ப்பின் தாக்கம் இருக்கவே செய்கின்றது. அந்தவகையில், புவியீர்ப்பு விசை இல்லாவிட்டால் உயிரினங்கள் உலகில் வாழவே முடியாது.





பசறை-பது/கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் பது/கோணக்கலை தமிழ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டித் தொடரில் வெற்றியீட்டிய கோணக்கலை மேற்பிரிவு இளங்கதிர் அணியினரையும் வித்தியாலய அதிபர் எஸ்.நவரட்ணராஜா போட்டியினைப் பார்வையிடுவதையும் காணலாம். தகவல்: மலர்வேந்தன் (நமுனுகுல)



ச.ஸஜானி,
வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி,
வவுனியா.



எஃப்.நஸ்லூன்,
பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம்,
ஓட்டமாவடி.





ஆர்.இந்துஜா,
பரி. யோவான் தமிழ் கல்லூரி,
இறக்குவானை.

அனுப்ப வேண்டிய முகவரி:



எ.அஷாஃப்,
ஸாஹிரா தேசிய பாடசாலை,
மாவனல்லை.



எஸ்.அப்துல்லாஹ்,
பதுரியா மத்திய கல்லூரி,
மாவனல்லை.



ரி.அக்தாஸ்,
சென் மேரிஸ் பெண்கள் வித்தியாலயம்,
பேசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனின் சுவாரஸ்யங்கள்



ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள மிகவும் பலவீனமான பிரதிபலிப்பைக் கொண்ட துணைக் கோளாக சந்திரன் கருதப்படுகின்றது. சந்திரனில் விழும் ஒளியில் 7 சதவீதத்தை மட்டுமே அது பிரதிபலிக்கின்றது என்பதே இதற்கான காரணமாகும்.

அப்பலோ 11, அப்பலோ 12, அப்பலோ 14 மற்றும் அப்பலோ 17 ஆகிய விண்வெளித் திட்டங்களின்போது சந்திரனின் மேற்பரப்பில் இருந்து சுமார் 382 கிலோகிராம் அளவிலான பாறை, மண் மாதிரிகள் பூமிக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

சந்திரனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரம் சுமார் 384,403 கிலோமீற்றர் ஆகும். சந்திரனின் சுற்றளவு 10,921 கிலோமீற்றர் ஆகும். இது பூமியின் சுற்றளவில் கால் மடங்காகும். சந்திரனின் தாக்கம் காரணமாக, பூமியின் சுழற்சிக் காலம் நூற்றாண்டுக்கு 0.002 செக்கன்களாக குறைகின்றது.

சந்திரன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடுத்து, அது 4,600,000,000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது. குறிப்பாக, பூமியின் சம வயதினைக் கொண்டதாகவோ அல்லது ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள இதர கோள்கள் போன்று பழமை வாய்ந்ததாகவோ இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகின்றது.

சந்திரன் மணித்தியாலத்திற்கு 3,683 கிலோமீற்றர் வேகத்தில் பூமியை சுற்றி வருகின்றது. அது பூமியை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவதற்கு 27 நாட்களும் 7 மணித்தியாலங்களும் 43 நிமிடங்களும் 11.5 செக்கன்களும் தேவைப்படுகின்றன.

பூமி தவிர, மனிதர்கள் கால்பதித்த ஒரே வான்பொருள் சந்திரன் ஆகும். 1969 ஆம் ஆண்டு அப்பலோ 11 திட்டத்தின்போதே இது சாத்தியப்பட்டது. அதன்படி, சந்திரனில் கால்பதித்த முதல் மனிதர் என்ற பெருமை அமெரிக்க விண்வெளி வீரரான நீல் ஆம்ஸ்ட்ரோங்கையே சாரும்.

உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions | the SUNDAY TIMES | விஜய் | DailyMirror | தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்



609

ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

දුව: අම්මේ! අපට වෙසක් උත්සවය ගැන රචනාවක් ලියා ගෙන එන්න කිව්වා.
அம்மே! அபட்ட வெசக் உத்சவய கென ரச்சனாவக் லியா கென என்ன கிவ்வா.
மகள்: **அம்மா! எங்களுக்கு வெசாக் பண்டிகையைப் பற்றி ஒரு கட்டுரை எழுதிக்கொண்டு வரச் சொன்னார்கள்.**

අම්මා: ඉතින්, දුව ලියන්න.
இத்தின், துவ லியன்ன.
அம்மா: **இனி, மகள் எழுதுங்கள்.**

දුව: අම්මේ! මට වෙසක් උත්සවය ගැන කියලා දෙන්නකෝ.
அம்மே! மட்ட வெசக் உத்சவய கென கியலா தென்னகோ.
மகள்: **அம்மா! எனக்கு வெசாக் பண்டிகை பற்றி சொல்லித் தாருங்களேன்.**

අම්මා: හොඳයි. වෙසක් උත්සවය පවත්වන්නේ මොන මාසයේද?
ஹொந்தய். வெசக் உத்சவய பவத்வன்னே மொன மாசயேத?
அம்மா: **நல்லது. வெசாக் பண்டிகை எந்த மாதத்தில் நடைபெறுகின்றது?**

දුව: මැයි මාසයේ.
மெய் மாசயே.
மகள்: **வைகாசி மாதத்தில்.**

අම්මා: මැයි මාසයේ පසළොස්වක පෝය දා. එදාට තියෙන විශේෂත්වය මොකද්ද?
மெய் மாசயே பசளொஸ்வக போய தா. எதாட்ட தியென விஷேஷத்வய மொகத்த?
அம்மா: **வைகாசி மாதம் பௌர்ணமி தினத்தன்று. அன்றைய தினத்திற்குரிய விசேஷம் என்ன?**

දුව: එදාට බුදු රජාණන් වහන්සේගේ උපත, බුදුවීම, පිරිනිවන් පෑම සිහි කරනවා.
எதாட்ட புது ரஜானன் வஹன்சேகே உபத, புதுவீம, பிரினிவன் பேம சிஹி கரனவா.
மகள்: **அன்றைக்கு புத்த பெருமானின் பிறப்பு, ஞானோதயம், பரிநிர்வாணம் ஆகியவற்றை நினைவுபடுத்துகின்றனர்.**

අම්මා: එදාට බෞද්ධයෝ පන්සල් යනවා. දන්සැල් දෙනවා.
எதாட்ட பௌத்தயோ பன்சல் யனவா. தன்செல் தெனவா.
அம்மா: **அன்றைய தினம் பௌத்தர்கள் விகாரைக்குப் போவார்கள். அன்னதானம் வழங்குவார்கள்.**

දුව: වෙසක් සැරසිලි, තොරණ් එහෙමත් හදනවනේ අම්මා?
வெசக் செரசிலி, தொரண் எஹெமத் ஹதனவனே அம்மா?
மகள்: **வெசாக் அலங்காரங்கள், தோரணங்கள் போன்றவையும் கட்டுவார்கள்தானே அம்மா?**

: අම්මේ! අපිත් වෙසක් බලන්න යමුද?
அம்மே! அப்பித் வெசக் பலன்ன யமுத?
: **அம்மா! நாங்களும் வெசாக் பார்க்கப் போவோமா?**

අම්මා: හා යමු.. ඊට කලින් මේ රචනාව ලියලා ඉවර කරන්න.
ஹா யமு. ஈட்ட கலின் மே ரச்சனாவ லியலா இவர கரன்ன.
அம்மா: **ஹா போவோம். அதற்கு முன்னர் இந்த கட்டுரையை எழுதி முடியுங்கள்.**



### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. බෞද්ධයෝ ............. යනවා.
2. අපිත් ............ බලන්න යමුද?
3. මේ ............. ලියලා ඉවර කරන්න.




பகுதி - 02
பாடம் - 53

## Are எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லின் இறந்தகால வடிவம் 'were' என்பதாகும்.

**'Are' எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லைத் தனியொரு வினைச்சொல்லாகக் கையாண்டு அமைக்கப்பட்ட நிகழ்கால தனி வாக்கியங்களையும், 'were' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லைத் தனியொரு வினைச்சொல்லாகக் கையாண்டு அமைக்கப்பட்ட இறந்தகால தனி வாக்கியங்களையும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.**

அ) You are in the class now.
நீ இப்பொழுது வகுப்பில் இருக்கிறாய்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஆ) You were in the shop yesterday.
நீ நேற்றுக் கடையில் இருந்தாய்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ You are.
நீ இருக்கின்றாய். (நிகழ்காலம்)

★ You were.
நீ இருந்தாய். (இறந்தகாலம்)

★ ★ ★ ★

இ) You all are in the class now.
நீங்கள் அனைவரும் இப்பொழுது வகுப்பில் இருக்கிறீர்கள்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஈ) You all were in the shop yesterday.
நீங்கள் அனைவரும் நேற்றுக் கடையில் இருந்தீர்கள்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ You all are.
நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள். (நிகழ்காலம்)

★ You all were.
நீங்கள் அனைவரும் இருந்தீர்கள். (இறந்தகாலம்)

★ ★ ★ ★

உ) We are at home now.
நாங்கள் இப்பொழுது வீட்டில் இருக்கிறோம்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஊ) We were at the library yesterday.
நாங்கள் நேற்று நூலகத்தில் இருந்தோம்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ We are.
நாங்கள் இருக்கிறோம். (நிகழ்காலம்)

★ We were.
நாங்கள் இருந்தோம். ( இறந்தகாலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெக்கோவிச்சை வென்றார் நடால்...



கடந்த முறை மெட்ரிட் டென்னிஸ் சாதனை யாளராகத் திகழ்ந்த நொவெச் ஜெக்கோ விச்சை இம்முறை 'மெட்ரிட்' அரையிறுதிப் போட்டியில் 2-0 என்ற கணக்கில் ஸ்பெயினின் ரஃபாயல் நடால் தோற் கடித்துள்ளார். மூன்று வருடங்களுக்கு பின்னரே, ஜெகோவிச்சை நடால் இவ்வாறு தோற்கடித்துள்ளார் என்பது பெரிதும் பேசப்படும் விடயமாகியுள்ளது. 2014 ஆம் ஆண்டில் பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் போட்டியில் ஜெக்கோவிச்சை நடால் தோற் கடித்த பின்னர், அதன் பின்னர் நடைபெற்ற 7 போட்டிகளிலும் நடால் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய ரசிகர்கள் மிகுந்த மகிழ்ச்சியில்



செம்பியன் கிண்ணப் போட்டிகளில் இந்திய அணி கலந்துகொள்ளுமா? இல்லையா என்ற கேள்விக்குப் பதில் கிடைத்ததையடுத்து இந்திய ரசிகர்கள் மகிழ்ச்சியும், ஆர்வமும் அடைந்துள்ளனர். இந்தியா கலந்துகொள்ளும் என அறிவிக்கப்பட்டதையடுத்தே, இந்த மகிழ்ச்சி எழுந்துள்ளது. ஐசிசி க்கும் இந்திய கிரிக்கெட் சபைக்குமிடையே இலாபப் பங்கீடு தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணத்தினால் இந்திய அணி செம்பியன் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளாது எனவும் அதனால், இந்திய அணியின் பெயர் பட்டியல் வெளியிடப்படாமல் தாமதிக்கப்பட்டது. எனினும், ஐசிசி மற்றும் இந்திய கிரிக்கெட் சபைகளுக்கிடையே இணக்கப்பாடு ஏற்பட்டமையின் காரணமாக, இந்திய அணி மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# மரே மூன்றாம் சுற்றில்..!



முதன்மை நிலை டென்னிஸ் வீரரான அன்டி மரே ஃபெயின் மெட்ரிட் பகிரங்க டெனிஸ் போட்டிகளில் ரொமேனியாவின் மாரிகஸ் கொப்பில்லை தோற்கடித்து மூன்றாம் சுற்றிற்கு தெரிவாகினார். உலக டென்னிஸ் தரப்படுத்தலில் 104 ஆவது இடத்தில் உள்ள கொப்பில் மற்றும் மரேக்கு இடையிலான இப்போட்டி 20 சுற்றுக்கள் நடைபெற்றது. இதன்படி 64-63 என்ற கணக்கிலேயே இப்போட்டி முடிவுற்றது.







# மெஸியின் உருவில் இன்னொரு நபர்

உலகப் புகழ் கால்பந்தாட்ட நட்சத்திரமான லயனல் மெஸ்ஸியின் உருவை ஒத்த ஒரு நபர் ஈரானில் இருப்பது தெரிய வந்துள்ளது. இவரது பெயர் ரெஸா பரஸ்டோஷ். வயது 25. இவரது உருவ அமைப்பு அச்சொட்டாக மெஸியின் உருவையே ஒத்திருப்பதால் அங்குள்ள மக்கள் இவருடன் புகைப்படம் எடுப்பதில் மிகுந்த ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர். மேலும், இவரை ஈரான் மெஸி என்றே மக்கள் அழைக்கின்றனர். தனது ஒவ்வொரு நடவடிக்கையும் அங்க அசைவுகளும் மெஸியைப் போலவே இருக்க வேண்டும் என்பதையே இந்த மக்கள் விரும்புவதாகவும், தன்னை நேரில் பார்ப்பதற்கு பெரிதும் விரும்பி வருகின்றனர் எனவும் மெஸியின் தோற்றத்தையுடைய ரெஸா தெரிவித்துள்ளார்.




# ரொனால்டோவின் வழியில் மகன்

உலகப் புகழ் கால்பந்தாட்ட வீரர் கிரிஸ்டியானோ ரொனால்டோவின் மகனும் தனது தந்தையின் வழியிலேயே சிறந்தவொரு கால்பந்து வீரராக ஜொலிப்பார் என விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.


அண்மையில் இடம்பெற்ற போட்டியொன்றில் இவர் மூன்று கோல்களைப் பெற்றதையடுத்தே, இந்த நம்பிக்கை துளிர்விட்டுள்ளது. இதையிட்டு கருத்துத் தெரிவித்துள்ள ரொனால்டோ தனது மகனின் இந்த திறமையையிட்டு தான் பெரிதும் மகிழ்ச்சி கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏதேனுமோர் ஆவணத்தின் மூலப் பிரதியை போன்று அதன் அச்சுப் பிரதியினை மிகச் சரியாகப் பெறுவதற்காக, மூலப் பிரதியுடன் அச்சுப் பிரதியை ஒப்பிட்டு சரி-பிழை பார்ப்பதே 'ஒப்புநோக்கல்' (சரிபார்த்தல்-Proofreading) எனப்படுகின்றது.

இன்றைய காலத்தில் அச்சு தொழில்நுட்பம் எவ்வளவுதான் முன்னேறியிருந்தாலும், பிரதிகளை ஒப்புநோக்குவதென்பது தவிர்க்க முடியாத ஒரு விடயமாகவே உள்ளது. அத்துடன், ஒப்புநோக்குவதற்கென்று பிரத்தியேகமாக ஓர் இயந்திரத்தை வடிவமைப்பதென்பதும் சாத்தியப்படாத ஒரு காரியமாகும். அந்தவகையில், ஒப்புநோக்கும் பணியானது, மனிதனை சார்ந்த ஒரு விடயமாகவே உள்ளது.



மூலப் பிரதியும் ஒப்புநோக்கல் பிரதியும்

எழுத்தாளரின் முதல் பிரதியே மூலப் பிரதி ஆகும். மூலப் பிரதி பெரும்பாலும் கையெழுத்துப் பிரதியாகவே இருக்கும். இந்த பிரதி தட்டச்சு செய்யப்பட்டு பெறப்படுவதே ஒப்புநோக்கல் பிரதியாகும். ஆனால், இன்றைய காலத்தில் மூலப் பிரதிகள் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட பிரதிகளாகவும் இருக்கின்றன.

## பிழைகளை திருத்துவது எப்படி?


ஒப்புநோக்காளரிடம் வழங்கப்படும் பிரதியில் பின்வரும் விடயங்கள் பிழையின்றி இருக்கின்றனவா என்று சரிபார்க்கப்படல் வேண்டும்.

- ★ வசன அமைப்பு
- ★ இலக்கண நடை
- ★ இடைவெளிகள்
- ★ எழுத்தமைப்பு (சரியான எழுத்துக்கள்)
- ★ வசனப் பிரிப்பு
- ★ எழுத்துப் பயன்பாடு
- ★ இலக்கங்களின் பயன்பாடு

## ஒப்புநோக்கப்படும் பிரதியில் இனங்காணப்படும் பிழைகள்

ஒப்புநோக்கல் பிரதியில் காணப்படும் ஒரு வாக்கியத்தின் அல்லது பந்தியின் ஆரம்பத்திலும் முடிவிலும் பெயர்ச்சொற்களின் பிரயோகம், நீளமான சொற்களைப் பயன்படுத்துதல், இலக்கங்களை இடுதல், தலைப்புகள் மற்றும் உப தலைப்புகளை இடுதல் என ஏதேனுமொன்றில் பிழைகள் இருக்கலாம். அவ்வாறே, பின்வரும் பிழைகளும் இனங்காணப்படலாம்.

- ★ சொற்கள், வாக்கியங்களின் பகுதிகள் இரண்டு தடவை பிரயோகிக்கப்பட்டிருத்தல்
- ★ ஒரே எழுத்து இரண்டு தடவைகள் அச்சாகியிருத்தல்
- ★ சிறிய சொற்கள் இணைந்திருத்தல்
- ★ பிழையான எழுத்துக்கள்
- ★ தவறான குறியீடுகள்
- ★ பூரணமற்ற வசனங்கள்
- ★ இடைவெளிகள் இல்லாமை
- ★ எழுத்துப் பிழைகள்
- ★ வசனப் பிரிப்பு பிழைகள்



## ஒப்புநோக்கும் முறை

- ★ தனியாக வாசித்துப் பார்த்து பிழையினை திருத்துதல்
- ★ உரக்க வாசித்து பிழைகளைத் திருத்துதல்
- ★ ஒருவர் வாசிக்கும்போது மற்றவர் ஒப்புநோக்கிப் பிழைகளைத் திருத்துதல்
- ★ இரண்டு தடவைகள் ஒப்புநோக்குதல்
- ★ இறுதியாக ஒப்புநோக்கப்பட்ட பிரதியை மூன்றாவது நபரிடம் வழங்கி பரீட்சிக்கச் செய்தல்



## பிழைகளை அடையாளமிடுதல்

நகல் பிரதியில் உள்ள பிழைகளை திருத்தம் செய்வதற்கு உதவுவதே ஒப்புநோக்காளரின் பணியாகும். இதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்புநோக்கல் தொடர்பான குறியீடுகள்

| குறி | விளக்கம் | குறி | விளக்கம் |
|---|---|---|---|
| ⊙ | முற்றுப்புள்ளி இடல் Period of Full stop | ⊓⊔ | மேலே அல்லது கீழே மாற்றுதல் Move to up or position |
| ,/ | காற்புள்ளி இடல் Comma | tr | இடம் மாற்றுதல் Transpose |
| H | சிறகோடு இடல் Hyphen | stet | இருந்தவாறே வைத்தல் Leave it as it was |
| :/ | முக்காற்புள்ளி இடல் Colon | ∂ | நீக்கிவிடுதல் Delete, take out |
| ;/ | அரைப்புள்ளி இடல் Semicolon | wf | பிழையான எழுத்துரு Wrong font |
| ʼ/ | ஒற்றை மேற்கோள்குறி இடல் Apostrophe | caps | கெப்பிட்டல் எழுத்து இடல் Capitals |
| "/" | இரட்டை மேற்கோள்குறி இடல் Quotations | s.c. | சிறிய கெப்பிட்டல் எழுத்து இடல் Small capitals |
| # | இடைவெளி விடுதல் Space | ital | சரிவான எழுத்துக்கள் Italics |
| ∂ | திருப்பவும் Turn | l/c | சிம்பல் எழுத்திடல் Lowercase |
| ⁐ | இணைக்கவும் (நெருக்கமாக்குதல்) Close up | rom | ரோமன் எழுத்திடல் Roman |
| ∧ | புதிதாக சேர்க்க வேண்டும் Insert | [/] | சதுர அடைப்புக்குறிகள் இடல் Brackets |
| ⊥ | கீழே கொண்டுவர வேண்டும் Push down to type level or press down space | (/) | அடைப்புக்குறிகள் இடல் Parentheses |
| ⊢⊣ | (நீண்ட) கோடு Dash | ∨ | எழுத்து/இலக்கம் மேலாக இடல் Superior letters or figures |
| [⊐] | வலது அல்லது இடதுக்கு மாற்றுதல் Move to right or left | ∧ | எழுத்து/இலக்கம் கீழாக இடல் Inferior letters or figures |





# ரதிகளை ஒப்புநோக்கல்

சுருக்கக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. பிழைகள் உள்ள இடங்களில் இந்த குறியீடுகள் இடப்படுகின்றன. இவற்றை அடிப்படையாக வைத்தே பிரதிகளிலுள்ள பிழைகள் திருத்தப்படுகின்றன. இதற்கமைய, ஒப்புநோக்காளரும் அவர் அடையாளமிட்ட பிழைகளை திருத்தி அமைப்பவரும் இந்த குறியீடுகளை அறிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

## ஒப்புநோக்கும் பணியின் முக்கியத்துவம்

ஒப்புநோக்காளரினால் அடையாளப்படுத்தப்பட்ட அனைத்துப் பிழைகளும் திருத்தப்பட்ட பின்பே, ஓர் ஆவணம் முழுமையடைகின்றது. எனவே, ஓர் ஆவணத்தை பிழைகள் அற்ற ஆவணமாக வழங்குவது ஒப்புநோக்காளரின் பிரதான கடமையாகும்.

பொதுவாக, மூலப்பிரதியினை எழுதியவர் அல்லது அவரினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் இறுதி ஒப்புநோக்கல் பிரதியை வாசித்து, அப்பிரதி அச்சுக்கு உகந்தது எனக் குறிப்பிட்டு கையொப்பம் இட வேண்டும். இத்துடன் ஒப்புநோக்காளரின் கடமை நிறைவடைகின்றது. இதனையடுத்து, மூலப் பிரதி அச்சுப் பிரதிக்கு பொருத்தமாக உள்ளது என்று அனுமதி அளித்தவரே, அதற்கு பொறுப்பானவராக கருதப்படுகின்றார். எவ்வாறாயினும், ஒரு மூலப் பிரதி சரியான அச்சுப் பிரதியாக வெளிவரும் வரை ஒப்புநோக்காளரும் எழுத்தாளரும் அச்சகரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

## ஒப்புநோக்கும் பணி

அச்சுத் தொழிலில் பிரிக்க முடியாத பணியாக ஒப்புநோக்கும் பணியினைக் குறிப்பிடலாம். பத்திரிகை நிறுவனங்கள், விளம்பர நிறுவனங்கள், புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் போன்ற அச்சுத்துறை சார்ந்த அனைத்து நிறுவனங்களிலும் ஒப்புநோக்காளர்கள் பணி முக்கியமானதாக கருதப்படுகின்றது. ஓரிடத்திலிருந்து பணியாற்ற விரும்புபவர்கள், ஒரு விடயம் மீது நீண்ட நேரம் கவனத்தினைக் குவிக்கக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள், வாசிப்பு பழக்கம் உள்ளவர்கள், மொழி ஆற்றல் கொண்டவர்கள் போன்றோர் இந்த பணிக்கு மிகவும் பொருத்தமானவர்களாவர். நிரந்தரப் பணியாகவும் பகுதி நேரப் பணியாகவும் ஒப்புநோக்கப்படும் பிரதிகளுக்கு ஏற்ப அறவீடு செய்யும் பணியாகவும் இந்த பணியினை மேற்கொள்ள முடியும்.


விருப்பம், ஆர்வம், அர்ப்பணிப்பு இருப்பின் நீங்களும் அச்சு நிறுவனங்கள் அல்லது வெளியீட்டு நிறுவனங்களில் ஒப்புநோக்காளர்களாக பணியாற்ற முடியும். சிறந்த ஒப்புநோக்காளர்களுக்கு அச்சுத்




தொழிற் துறையில் பெரும் வரவேற்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் மிக அகலமான சங்கமன் கந்தை











இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பாசிக்குடாவும் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள அறுகம் குடாவும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்ந்துள்ள சுற்றுலா மையங்களாகும். பாசிக்குடா கடற்கரையும் அறுகம் குடா கடற்கரையும் அலைகள் மீது சறுக்கி விளையாடும் Surfing விளையாட்டிற்கு உலகப்புகழ் பெற்ற இடங்களாகும்.

இந்த அழகிய கடற்கரையைத் தவிர மேலும் பல முக்கியமான, புகழ்பெற்ற, பலர் பார்த்திராத பல இடங்களையும் கிழக்கிலங்கையில் நாம் காணலாம். குமன தேசிய பூங்கா, குடும்பிமலை, பாணம, தீகவாபி போன்றவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. இவை தவிர, அமிர்தகழி மாமாங்க ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் போன்ற இந்து மக்களின் புகழ்பெற்ற வழிபாட்டுத் தலங்களும் இப்பிரதேசத்திலேயே அமைந்துள்ளன.

அவற்றில் பாசிக்குடாவுக்கும் வாகரைக்கும் இடையில் உள்ள காயன்காலி பாலம், பனிச்சங்கேனி களப்பு, சல்லனிம் கடற்கரை, வாகரை கடற்கரை என்பனவும் அறுகம்குடா பாணமைக்கருகில் உள்ள மணல்மலை, பாணம முதலைகள் நிறைந்த குளம் போன்றவையும் கண்டுகளிக்க வேண்டிய முக்கிய இடங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாசிக்குடா கடற்கரை மனதைப் பெரிதும் கொள்ளை கொள்ளும் ஒரு கடற்கரையாகும். பளிங்குப் பாறைகளுடன்கூடிய இயற்கையின் அற்புத இடங்களில் பாசிக்குடாவுக்கு தனியான ஓர் இடமுண்டு.

இக்கடற்கரை குளிப்பதற்கான பாதுகாப்பு வலயத்தையும் கொண்டுள்ளது. பாணமைக்குச் செல்லும் நீங்கள் குமண, குடும்பிமலை, ஆகிய இடங்களையும் கண்டுகளிக்கலாம். இவை சுற்றுலா மையங்கள் மட்டுமல்ல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுமாகும். கூடவே இலங்கையின் மிக அகலமான இடங்களாக மேற்கே கொழும்பும், கிழக்கே சங்கமன் கந்தையும் அமைந்துள்ளன. அறுகம் குடாவில் இருந்து 18 கிலோ மீற்றர் பயணிக்கும் பொழுது சங்கமன் கந்தையை சென்றடைய முடியும்.

மணல்சேனை கிராமத்தில்தான் சங்கமன்கந்தை அமைந்துள்ளது. இங்கு செல்வதற்கு பிரதான பாதையில் இருந்து 3 முதல் 4 கிலோ மீற்றர் பயணிக்க வேண்டும். இப்பகுதிகள் விவசாய பயிர்ச்செய்கை நிலங்களாகும். காய்கறிகள், நிலக்கடலை, தென்னை என்பன இங்கு அதிகளவில் பயிரிடப்படுகின்றன. அதிகளவான மீன் வாடிகளும் இங்கு காணப்படுகின்றன. இங்குள்ள மக்களின் பிரதான வாழ்வாதாரமாக மீன்பிடித் தொழிலும் விவசாயமும் திகழ்கின்றது. சங்கமன்கந்தை கடற்கரை இலங்கையிலேயே மிகவும் அகலமான இடமாக திகழ்வதோடு, அங்கு புராதன கலங்கரை விளக்கத்தின் சிதைவுகள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(-அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ் குப்பை மேடுகள்



அண்மைக் காலமாக நாட்டில் பெரிதும் பேசப்பட்டு வரும் ஒரு விடயம்தான் குப்பை மேடுகள் பற்றிய விடயமாகும். அண்மையில் கொழும்பு, கொலன்னாவையில் குப்பை மேடு சரிந்ததில் ஏற்பட்ட அனர்த்தங்களையும் நீங்கள் அறிவீர்கள்.

இந்த 'குப்பை மேடு' என்பது இலங்கைக்கு மட்டுமல்ல உலகிலுள்ள பல நாடுகளுக்கும் உள்ள ஒரு பிரச்சினைதான். உலகில் பல நாடுகளிலும் இவ்வாறு குப்பை மேடுகள் பல உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் உலகில் மிகப் பெரிய குப்பை மேடுகள் பற்றியும், அவற்றுள் சிலவற்றைக் கொண்டு பெறப்படும் நன்மைகள் குறித்தும், இன்னும் சிலவற்றால் இயற்கைக்கு ஏற்படும் சீர்கேடுகள் பற்றியதுமான ஒரு தொகுப்பே இங்கு வழங்கப்படுகின்றது.

## ஃபெரஸ்கீலிஸ் குப்பை மேடு



அமெரிக்காவின் நியூயோர்க் நகரிற்கு அருகாமையில் அமைந்துள்ள இந்த குப்பை மேட்டில் குப்பை கொட்டுவது இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. நியூயோர்க் நகரிற்கான நாளாந்த எரிபொருள் பயன்பாட்டிற்கு தேவையான 2/3 பகுதி மீதென் வாயு இந்த குப்பை மேட்டிலிருந்தே பெறப்படுகின்றது. இன்னும் சில வருடங்களுக்கு இந்த குப்பை மேட்டிலிருந்து மீதென் வாயுவைப் பெறமுடியும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இப்பகுதியில் அழகிய பூங்காவொன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பசுபிக் குப்பை மேடு



பசுபிக் கடலில் மிதந்தவாறே இந்த குப்பை மேடு காணப்படுகின்றது. நம்பினால் நம்புங்கள் இந்த குப்பை மேடானது, அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தை விட விசாலமானதாகும். இந்த குப்பையை மீள் சுழற்சி செய்வதும்கூட கடினமாக உள்ளதாம். உலக சுகாதார நிறுவனம், யுனெஸ்கோ மற்றும் உலக சுற்றுச் சூழல் அமைப்பு ஆகியன இந்த குப்பை மேட்டினால் ஏற்படும் பாதிப்புக்களை தவிர்ப்பதற்கு வழியின்றித் தவித்து வருகின்றன. பிளாஸ்டிக் பொருட்களே, இந்தக் குப்பையில் அதிகமாக காணப்படுகின்றன.

## கயியு குப்பை மேடு



இந்தக் குப்பை மேட்டின் சொந்தக்காரர் சீனாவாகும். குப்பை மேடுகளின் அளவில் இது இரண்டாவது இடத்தைப் பெறுவதுடன், இந்த குப்பை மேடுதான் உலகிலேயே மிக ஆபத்தான குப்பை மேடாகவும் கருதப்படுகின்றது. காரணம், இந்த குப்பை மேட்டில் இலத்திரனியல் கழிவுப் பொருட்கள் மாத்திரமே நிரம்பி வழிகின்றமையினாலாகும். இந்த குப்பை மேட்டிற்கு அருகாமையில் வசித்து வருகின்றவர்கள் கதிர்வீச்சுத்தாக்கத்தின் காரணமாக, பாதிப்படைவதாகவும் இப்பகுதியில் பிறக்கும் குழந்தைகள் அங்கவீனத்துடன் பிறப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சுதொக்வொன் குப்பை மேடு

தென் கொரியாவின் சுதொக்வொன் குப்பை மேடுதான் உலகிலேயே மூன்றாவது மிகப் பெரிய குப்பை மேடாகும். ஆனால், இது பார்வைக்கு குப்பை மேடுபோல் தோன்றாது. அது ஒரு பசுமை நகரம் போலவே காட்சியளிக்கின்றது. இந்த குப்பை மேட்டின் மேல்புறங்களில்



பசுமை மிகு மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளமையாலேயே இவ்வாறு பசுமை நகரம் போல் காட்சியளிக்கின்றது. கொரியர்கள் இந்த குப்பை மேட்டிலிருந்து 'மீதென்' வாயுவைப் பெற்றுக்கொள்கின்றனர். இந்த குப்பைமேட்டில் நாளொன்றிற்கு 10,000 தொன் குப்பைகள் கொட்டப்படுகின்றது.

## நிவ்டன் கவுன்ட் குப்பை மேடு



இதுதான் உலகிலேயே மிகவும் சிறந்த குப்பை மேடாக கருதப்படுகின்றது. காரணம், உலக தரம்மிக்க தொழில்நுட்ப முறைகளை கையாண்டு முறையாக நிர்வகிக்கப்படுகின்ற குப்பை மேடு இதுவொன்றே யாகும். இந்த குப்பை மேட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதில்லை. அமெரிக்காவின் இந்தியானா மாநிலத் தில் அமையப்பெற்றுள்ள இந்த குப்பை மேடுதான் அமெரிக்காவில் காணப்படும் செயற்றிறன் மிக்க குப்பை மேடாகும். நாளொன்றிற்கு 20,000 தொன் குப்பைகள் இந்த குப்பை மேட்டில் கொட்டப்படுகின்றன. இது 400 ஏக்கர் நிலப்பகுதியில் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியா

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நைஜீரியா பிரித்தானியரிடமிருந்து 1963 ஆம் ஆண்டில் சுதந்திரமடைந்தது. அதன்பின்னர் பல வருடங்களாக இராணுவ ஆட்சி நிலவியபோது 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னரே, ஆட்சி அதிகாரம் முதல் முறையாக ஜனநாயக முறைக்கு மாறியது. இந்நாடு பொதுநலவாயத்திலும் ஆபிரிக்கச் சங்கத்திலும் அங்கம் வகிக்கின்றது.


இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதலாவது ஆபிரிக்கரான 'வோலே சொயின்கா' இந்நாட்டு பிரஜையாவார்.


இங்கு வாழ்ந்த நொக் என்ற பழங்குடி மக்களின் 'டெராகோட்டா' எனும் சிலையானது, சிறந்த வரலாற்று ஆவணமாகும்.



### தேசிய பறவையும் மலரும்


தேசிய பறவை - கழுகு
தேசிய மலர் - கொஸ்டஸ் ஸ்பெக்டபிலிஸ்

### இனங்கள்




**மொழி:** ஆங்கிலம் (உத்தியோகபூர்வ மொழி), ஹவுசா, ஹொருபா, இக்போ, ஃபுளானி, மேலும் 500 மொழிகள்

**சமயம்:** இஸ்லாம் 50%
கிறிஸ்தவம் 20%
கோத்திர நம்பிக்கைகள் 10%

இங்கு ஒன்றுடன் ஒன்று மாறுபட்ட 250 கோத்திரக் குழுவினர் வாழ்கின்றனர்.

### அரசியல்





### இயற்கை வளம்

இயற்கை வாயு, பெற்றோலியம், தகரம், இரும்பு, நிலக்கரி, ... , செம்பு, நுத்ததாகம், கல்லைக்கல்




தகவல் தொழில்நுட்பம் மற்றும் செய்மதித் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஆபிரிக்காவிலேயே இந்நாடு முன்னேற்றகரமானதொரு நாடாகும்.



### தலைநகரம்






நாணயம்
நைரா


பாரம்பரிய உடை


'சுமா ரொக்' மலை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்ததோர் இடமாகும்.

இங்குள்ள மசகு எண்ணெய் உற்பத்தியில் ஏற்படும் கசிவால் விபத்துக்களும் கழிமுகம் மாசடைவும் ஏற்படுகின்றது.

### பெரிய நகரம்


நிலக்கடலை, கொக்கோ, இறப்பர், சோயா, யோஞ்சி, பாம் எண்ணெய் என்பன இங்கு பயிராகின்றன.

தேயிலைக் கைத்தொழிலில் புகழ்பெற்றது.




இங்கு உருவாக்கப்படும் திரைப்படத் தயாரிப்புகளை 'நொலிவுட்' என அழைக்கின்றனர்.


போகோஹறாம் என்ற பயங்கரவாத அமைப்பு இங்கு போராட்டங்களை மேற்கொள்கின்றது.


இந்நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருளாக மசகு எண்ணெய் திகழ்கின்றது.

---




## மாணவர்களுக்கான .... அகில இலங்கை சித்திரப் போட்டி

### தலைப்பு

கடற்பன்றிகள், கடல் ஆமைகள், சதுப்பு நில சூழல், பவளப் பாறைகள் ஆகியவற்றைக் கொண்ட கடலோர வளங்களை உள்ளடக்கிய எந்தவொரு காட்சியையும் வரையலாம்.

### போட்டி விபரங்கள்/ விதிமுறைகள்

★ ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்ப முடியும்.
★ சித்திரத்தின் அளவு35cmx45cm அளவில் இருத்தல் வேண்டும்.
★ எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தலாம்.
★ சித்திரத்தின் பின்புறம் போட்டியாளரின் முழுப்பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, பாடசாலை, வகுப்பு, பாடசாலை முகவரி, போட்டியிடும் பிரிவு ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

### போட்டிப் பிரிவுகள்

★ பாலர் வகுப்பு மாணவர்கள்
★ ஆரம்பப் பிரிவு
(தரம்1, 2, 3, 4, 5 மாணவர்கள்)
★ கனிஷ்ட பிரிவு
(தரம் 6, 7, 8, 10 மாணவர்கள்)
★ சிரேஷ்ட பிரிவு
(தரம் 11, 12, 13 மாணவர்கள்)

சகல சித்திரங்களும் 31/05/2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு கீழ் காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**'அழகிய கடற்கரை-2017'**
அகில இலங்கை சித்திரப் போட்டி,
இலங்கை கடல் ஆமைகள் பாதுகாப்பு திட்டம்,
இல-07, நிர்மல மாவத்தை,
பாணந்துறை.

போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் எக்காரணங்களைக் கொண்டும் மீண்டும் வழங்கப்படமாட்டாது

### பணப் பரிசில்கள்

**பாலர் வகுப்பு**
1ஆம் இடம் ரூ 7,000
2ஆம் இடம் ரூ 5,000
3ஆம் இடம் ரூ 3,000

**ஆரம்பப் பிரிவு**
1ஆம் இடம் ரூ 10,000
2ஆம் இடம் ரூ 7,000
3ஆம் இடம் ரூ 5,000

**கனிஷ்ட பிரிவு**
1ஆம் இடம் ரூ 15,000
2ஆம் இடம் ரூ 10,000
3ஆம் இடம் ரூ 7,000

**சிரேஷ்ட பிரிவு**
1ஆம் இடம் ரூ 20,000
2ஆம் இடம் ரூ 15,000
3ஆம் இடம் ரூ 12,000

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் சிறந்த 100 சித்திரங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றிற்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.



சித்திரங்களுக்கான உரிமம் கடல் ஆமைகள் பாதுகாப்பு திட்டத்திற்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் ஆந்தைகள் இரவில் மட்டும்தான் இரை தேடும் என நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால், மத்திய ஐரோப்பாவிலும், வட அமெரிக்கப் பகுதிகளிலும் வாழும் ஒருவகை ராஜாளி ஆந்தை இனம் (Northern Hawk Owl) பகலிலும் வேட்டையாடுகின்றன.



# பகலில் வேட்டையாடும் ராஜாளி ஆந்தை




இவை உயரமான மரப் பொந்துகளில் வாழ்கின்றன. இந்த ஆந்தைகள் பெரும்பாலும் நீர்நிலைக் கரையோரங்களில் வாழும் எலிகள், சிறு முயல்கள் போன்றவற்றை வேட்டையாடுகின்றன.

இவை உயரத்தில் பறக்கும்போது, தரைப்பகுதியில் பாய்ந்தோடும் சிறு இரையைக்கூட அடையாளம் கண்டு சத்தம் இல்லாமல் மிக லாவகமாகப் பிடிப்பதில் வல்லமை வாய்ந்தவை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# தெரிந்து கொள்வோம்



ஹொங்கொங் நாட்டின் முதல் பெண் அரசியல் தலைவர் யார்?
கிறேய் லாம்



உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியான அல்பர்ட் ஐன்ஸ்டின் பிறந்தநாளை எந்த தினமாக நினைவு கூரப்படுகின்றது?
பை π தினமாக 1988 முதல் நினைவு கூரப்படுகின்றது.



அமெரிக்க சுதந்திரப் புரட்சி எக்காலப்பகுதியில் இடம்பெற்றது?
1765 ஆம் ஆண்டிலிருந்து 1783 ஆம் ஆண்டு வரை




வெண் கடல் என்றால் என்ன?
வெண்மையான பனிப்பாறைகள் மூடிய கடலாகும்



உலகில் முதலாவது நூலகம் எந்த நாகரிக காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது?
மொசபத்தேமிய நாகரிகம்


தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# ஒளியை உமிழும் காளான்கள்



நாம் இரவு நேரங்களில் மின்மினிப் பூச்சிகள் ஒளிர்வதைக் கண்டுள்ளோம். அவ்வாறே, ஒருவகையான காளான்களும் ஒளியை உமிழ்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த காளான்கள் பற்றிய விபரங்கள் Neonothopanus Gardneri என்ற தாவர வகைப் பட்டியலில் குறிப்பிடப்படுகின்றது.

இவை பெரும்பாலும் பச்சை நிற ஒளியையே உமிழ்கின்றன. இதற்கு காரணம் வளிமண்டலத்திலுள்ள ஒட்சிசனோடு ஆக்ஸிலுனிஃபெர்ன்ஸ் எனும் நொதியம் வினை புரிவதால் ஆகும். இந்த காளான்கள் உமிழும் ஒளியால் கவரப்படும் பூச்சிகள் இதன்மேல் வந்தமரும்போது, இதில் உள்ள நுண் விதைகள் பூச்சிகளின் காலில் ஒட்டிக் கொள்கின்றன. இதன்மூலம் இந்த காளான்கள் பரவல் அடைகின்றன.




## நூல் அறிமுகம்

# பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள்

'பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள்' என்ற நூல் வெளியாகியுள்ளது. எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப் எழுதி, தொகுத்து வழங்கியுள்ள இந்நூல் இவர் வெளியிட்டுள்ள பொது அறிவு நூல் வரிசையில் 17 ஆவது நூலாகும். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் போட்டிப் பரீட்சைகளுக்கு முகம் கொடுப்போர் என அநேகருக்கும் பயன்தரும் அம்சங்களை இந்நூல் கொண்டுள்ளது. குறிப்பாக புவியியல், பொருளியல், அரசியல், தமிழ் மொழி, விஞ்ஞானம், வர்த்தகம், வரலாறு, வணிக முகாமைத்துவம், வணிகவியல் போன்ற துறைசார் பாடங்களை கற்கும் மாணவர்களுக்கு இந்நூல் பயன்மிக்கதாக அமைந்துள்ளது. இந்நூலாசிரியர் 'விஜய்' பத்திரிகையில் உடுவை பரந்தாமன் எனும் பெயரில் 'தெரிந்து கொள்வோம்' எனும் தலைப்பில் வினா-விடைகளை வழங்கி வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




### நூல் விபரம்

| | |
|---|---|
| தலைப்பு | : பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள் |
| நூலாசிரியர் | : எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப் |
| பக்கங்கள் | : 461 |
| விலை | : ரூ. 540.00 |
| தொடர்பு | : 0777361291 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் நண்பர்கள்

மண்ணில் விழும் சருகுகள், இலைகள் போன்றவற்றை உட்கொள்ளும் மண்புழுக்கள், அவற்றை கழிவுகளாக வெளியேற்றி, தாம் வாழும் மண்ணை வளப்படுத்துகின்றன. இதனால், விவசாயிகளின் நண்பனாக மண்புழுக்கள் கருதப்படுகின்றன.

இந்நிலையில், விவசாயிகளின் நண்பன் எனும் பட்டியலில் மேலும் இரண்டு உயிரினங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவைதான் ஆந்தைகளும் பெரிய பழுப்பு நிற வௌவால்களும் ஆகும். விவசாயத்திற்கு தீங்கு விளைவிக்கின்ற மற்றும் பயிர்களை சேதப்படுத்துகின்ற எலி, வெட்டுக்கிளி, புழுக்கள் மற்றும் பூச்சிகள் போன்றவற்றை இவை உணவாகக்கொள்கின்றனவாம்!







# சிறப்புக்கள் நிறைந்த நாடு




ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ அமைப்பினால் உலக மரபுரிமைத்தளங்களாக அங்கீகரிக்கப்பட்ட 40 இற்கும் மேற்பட்ட இடங்களை கொண்ட பெருமைக்குரிய நாடுதான் இத்தாலி. இது தவிர, இந்த நாடு மேலும் பல சிறப்புகளைத் தன்னகம் கொண்டுள்ளது.

அதன்படி, இத்தாலிக்குள் இன்னொரு நாடு அமைந்துள்ளது. அதுதான் உலகின் மிகச் சிறிய நாடாக கருதப்படும் வத்திக்கான் நகரம். அவ்வாறே, முற்றிலும் நீரினால் சூழப்பட்ட உலகின் மிதக்கும் நகரம் எனப்படுகின்ற வெனிஸ் நகரமும் இங்குதான் உள்ளது. பண்டைய உலகின் வல்லமை மிக்க சாம்ராஜ்யங்களில் ஒன்றான ரோம் நகரம்தான் இன்றளவில் இத்தாலியின் தலைநகரமாகும். உலகப் புகழ்பெற்ற சாய்கோபுரம், கொலோசியம் அரங்கு போன்றவையும் இங்குதான் உள்ளன. இவ்வாறு பலதரப்பட்ட சிறப்புக்களைக் கொண்டுள்ள இத்தாலிக்கு வருடாந்தம் சுமார் 50 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்றனர்.





# காலை நட்சத்திரம், மாலை நட்சத்திரம்

எமது ஞாயிற்றுத் தொகுதியில் சூரியனுக்கு மிக நெருங்கிய கோள்களில் இரண்டாவதாக இருப்பது வெள்ளி ஆகும். வெள்ளிக் கோளானது, 'காலை நட்சத்திரம்' (Morning Star) மற்றும் 'மாலை நட்சத்திரம்' (Evening Star) என இரு வேறு செல்லப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இதற்கு காரணம், வெள்ளியின் சுற்றுப்பாதை அமைவின்படி, குறிப்பிட்ட ஒரு காலத்தில் சூரியன் உதிக்கும்போது, கிழக்கு வானில் பிரகாசமான நட்சத்திரத்தைப் போன்று அது காட்சியளிக்கும். இதனால் அதனை 'காலை நட்சத்திரம்' என்று அழைப்பர். அவ்வாறே, மற்றுமொரு காலப்பகுதியில் சூரியன் மறையும்போது, மேற்கு வானில் மிகவும் பிரகாசமான நட்சத்திரத்தைப் போன்று அது காட்சியளிக்கும். இதன்போது அது 'மாலை நட்சத்திரம்' என்று அழைக்கப்படுகின்றது.



# பிரேசில் நட்

பல்வேறு நோய்களுக்கு மருந்தாக அமையக்கூடிய ஒரு விதை வகைதான் 'பிரேசில் நட்' (Brazil nut) ஆகும். இதில் கொழுப்புச் சத்து, கார்போஹைட்ரேட், புரதம், நார்ச்சத்து, தாதுப்பொருட்கள், விற்றமின்கள் என்பன அடங்கியுள்ளன.

இந்த விதையிலுள்ள சத்துக்களுக்கமைய, அது பல்வேறு நோய்களைத் தீர்க்கும் ஆற்றலையும் கொண்டுள்ளது. அதன்படி புற்றுநோய், கல்லீரல் அரிப்பு, இதயநோய் போன்ற பல்வேறு நோய்களைத் தீர்ப்பதற்கான ஆற்றல் பிரேசில் நட்டில் உண்டு. தவிர, பிரேசில் நட் சாப்பிடுவதனால் நீரிழிவு நோயும் கட்டுப்படுத்தப்படுகின்றது. மூட்டுவலிகள் குறையும். கெட்ட கொழுப்பை குறைத்துக்கொள்ளலாம். இரத்தசோகையை தடுப்பதுடன், இதயம் பலம் பெறவும் அது உதவும்.



இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, மே 24 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 24 , 2017.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org